**பீஓசி புறொப்பட்டி டெவெலப்மென்ட் அன்ட் மனேஜ்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பீஓசி புறொப்பட்டி டெவெலப்மென்ட் அன்ட் மனேஜ்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட்டின் ("கம்பனி") 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கை தகவல்களை உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டியவைகள்

**கணக்காய்வு விடயம்**

சகல ஒப்பந்தக்காரர்களுடனான ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளில் வாடகையானது முற்பணமாக செலுத்தப்படல் வேண்டும். எனினும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் பெறவேண்டிய மீதியானது ரூபா 12,146,196 ஆகும். இதில் 90 நாட்களுக்கு மேலாக ரூபா 4,211,086 அல்லது 34.67 சதவீதமானவை நிலுவையாக உள்ளது. ஆகையினால் கம்பனியினால் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் உடன்பட்ட வியாபார வருமானத்தினை சேகரிக்க முடியவில்லை என்பது அவதானக்கப்பட்டது. மொத்த வியாபார பெறவேண்டியவைகளில் ரூபா 12,062,854 அல்லது 99.3 சதவீதமானவை கொள்ளுப்பிட்டி மேர்சன்ட் டவர் கட்டடத்திடமிருந்தும் மிகுதி 0.7 சதவீதமானவை கண்டி சீபேங்க் ஹவுஸிடமிருந்துமாகும். வியாபார பெறவேண்டியவைகளின் வயதுப் பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | நிலுவை மீதி (ரூபா) | | | | |
|---|---|---|---|---|---|
| | 1-30 நாட்கள் | 31-60 நாட்கள் | 61 – 90 நாட்கள் | 90 நாட்களுக்கு மேல் | மொத்தம் |
| **மேர்ச்சன்ட் டவரிலுள்ள ஒப்பந்தக்காரர்கள் - கொள்ளுப்பிட்டி** | | | | | |
| 1. ஸ்ரீ லங்கா மேர்ச்சன்ட் பேங் & பைனான்ஸ் பிஎல்சி | 2,607,549 | - | - | - | 2,607,549 |
| 2. இலங்கை வங்கி – மேல் மாகாணம் வடக்கு | 277,903 | - | - | - | 277,903 |
| 3. இலங்கை வங்கி – சுபர் க்ரேட் கிளை | 338,184 | - | - | - | 338,184 |
| 4. இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் | 2,033,651 | - | - | 188,813 | 2,222,464 |
| 5. எஸ்எல்ஐஐடி சிடி யுனி (பிறைவேட்) லிமிட்டட் | 1,677,065 | - | - | 174,360 | 1,851,425 |
| 6. எஞ்சினுய்டி (பிறைவேட்) லிமிட்டட் | - | - | - | 3,847,913 | 3,847,913 |

**முகாமைத்துவ கருத்துரை**

எஞ்சினுய்டி (பிறைவேட்) லிமிட்டட் (ரூபா 3,847,913) , இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (ரூபா 188,813) மற்றும் எஸ்எல்ஐஐடி சிடி யுனி (பிறைவேட்) லிமிட்டட் (ரூபா 174,360) என்பவைகள் தவிர்ந்த காட்டப்பட்டுள்ள ஏனைய அனைத்து பெறவேண்டியவைகள் முழுமையாக தீர்க்கப்பட்டுள்ளன. எரிபொருள் நெருக்கடியின் போது அறிமுகப்படுத்தப்பட்ட மிகைக்கட்டணங்களே இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் எஸ்எல்ஐஐடி சிடி யுனி (பிறைவேட்) லிமிட்டட் என்பவைகளிடமிருந்து பெறவேண்டியவைகளாக உள்ளன.

**பெறவேண்டியவைகளின் பிரிப்பு பின்வருமாறு,**

வாடகை - ரூபா 3,501,844
பெறவேண்டிய நிறுத்தி வைத்த வரி (திசெம்பர்) - ரூபா 1,714,237
மீள்நிரப்பக்கூடியவை - ரூபா 6,366,942 (இதில் ரூபா 6,160,492 தொகையானது 2023.12.31 இல் பட்டியலிடப்பட்டது)
மின்சார மிகைக்கட்டணம் - ரூபா 363,173
ஏனையவைகள் - ரூபா 200,000

**பரிந்துரை**

உரிய நேரத்தினுள் வியாபார பெறவேண்டியவைகளை சேகரிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7.டியலொக் அக்ஸியடா பிஎல்சி | 105,689 | - | - | - | 105,689 |
| 8. மொபிட்டல் (பிறைவேட்) லிமிட்டட் | 43,014 | - | - | - | 43,014 |
| 9. பர்டி எயார்டல் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | 40,104 | 38,596 | - | - | 78,700 |
| 10. இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு | 553,629 | - | - | - | 553,629 |
| 11. . கியுஎஸ் கோர்ப் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | 103,676 | - | 853 | - | 104,529 |
| 12. ப்ரானிஸ் கெபேடேரியா | 12,521 | 19,334 | - | - | 31,855 |
| **மொத்தம் - எம்டி (அ)** | **7,792,985** | **57,930** | **853** | **4,211,086** | **12,062,854** |
| **சிபேங்க் ஹவுஸிலுள்ள ஒப்பந்தக்காரர்கள் - கண்டி** | | | | | |
| 1. ஸ்ரீ லங்கா மேர்ச்சன்ட் பேங் & பைனான்ஸ் பிஎல்சி | 24,035 | - | - | - | 24,035 |
| 2. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை | 59,307 | - | - | - | 59,307 |
| **மொத்தம் - சிபேங்க் (ஆ)** | **83,342** | **-** | **-** | **-** | **83,342** |
| **முழுவதுமான மொத்தம் (அ +ஆ)** | **7,876,327** | **57,930** | **853** | **4,211,086** | **12,146,196** |

| | | | |
|---|---|---|---|
| (ii) | எஞ்சினுய்டி (பிறைவேட்) லிமிட்டடின் ஒப்பந்த உடன்படிக்கையானது 2021 டிசெம்பர் மாதத்தில் முடிவடைந்துள்ள போதிலும் கணக்காய்வு திகதியான 2024 யூன் 10 ஆம் திகதி வரை ரூபா 3,847,913 நிலுவை மீதியானது மீட்கப்பட்டிருக்கவில்லை. | எஞ்சினுய்டி (பிறைவேட்) லிமிட்டட்டிடமிருந்து நிலுவையினை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (வழக்கு இல. டிஎம்ஆர் 1375/23 – பதிலளிப்பிற்காக இறுதி அழைப்புத் திகதி 2024.06.14 ஆவதுடன் விடையளிப்பதற்காக அழைப்புத் திகதி 2024.10.18 ஆகும்) | நட்டமின்றி நிலுவை மீதியினை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது. |

**1.6 காசு முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி எப்போதும் உயர் நடைமுறைச் சொத்து நிலையை பேணி வருவதுடன் இலாபம் ஈட்டும் நீண்டகால முதலீடுகள் மீது கவனம் செலுத்துவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. பின்வரும் அட்டவணையின் பிரகாரம் 2019 முதல் 2020 வரை மொத்த சொத்துக்களுக்கான நடைமுறைச் சொத்துக்களின் சதவீதம் படிப்படியாக 60 சதவீதத்திலிருந்து 64 சதவீதம் வரை அதிகரித்துள்ளதுடன் 2021 ஆம் ஆண்டில் இது 43 சதவீதத்திற்கு குறைவடைந்துள்ளது. எனினும் 2022 ஆம் ஆண்டில் இது 50 சதவீதத்திற்கு உயர்வடைந்துள்ளது. மீளாய்வாண்டின் போது இருப்புக்கள், பெறவேண்டியவைகள் மற்றும் குறுகிய கால முதலீடுகள் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பும் சொத்துக்கள் பயன்பாட்டின் உரிமை மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றில் குறைவும் ஏற்பட்டதன் விளைவாக 2023 ஆம் ஆண்டில் இது மேலும் 54 சதவீதம் வரை உயர்வடைந்துள்ளது. | வேறோரு கட்டிட முகாமைத்துவ செயற்திட்டத்தில் முதலீடு செய்வதற்காக சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | திரவத்தன்மை மற்றும் இலாபத்தன்மை என்பவற்றுக்கிடையே சமநிலையொன்றினை பேணுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது |

| விபரம் | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 |
|---|---|---|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் (ரூபா 000) | 2,350,447 | 2,169,300 | 2,112,041 | 2,050,868 | 1,927,314 |
| நடைமுறை சொத்துக்கள் (ரூபா 000) | 1,257,796 | 1,075,678 | 901,564 | 1,310,738 | 1,155,591 |
| காசு மற்றும் காசிற்கு சமனானவை (ரூபா 000) | 1,271 | 1,384 | 2,390 | 6,017 | 681 |
| ஏனைய நடைமுறை நிதிச் சொத்துக்கள்/ குறுகிய கால முதலீடு (ரூபா 000) | 1,228,592 | 1,043,078 | 883,942 | 1,281,361 | 1,123,089 |
| மொத்த சொத்துக்களின் % ஆக நடைமுறைச் சொத்துக்கள் | 54 | 50 | 43 | 64 | 60 |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 309 மில்லியன் தொகை இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபமாக ரூபா 279 மில்லியன் தொகை காணப்பட்டது. ஆகையால், நிதி விளைவில் ரூபா 30 மில்லியன் தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது 48 சதவீதத்தினால் நிதி வருமானம் அதிகரித்தமையே நிதி விளைவு அதிகரித்தமைக்கான பிரதான காரணமாகும்.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | வேறுபாட்டுத் தொகை அதிகரிப்பு / (வீழ்ச்சி) (ரூபா 000') | வேறுபாடு (%) | வேறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|
| நிதி வருமானம் | 93,977,059 | 47.90 | - ஆர்இபீஓ முதலீடுகள், நிலையான வைப்புக்கள் மற்றும் தொகுதிக்கடன் ஆகியவற்றின் மீது வட்டி வருமானம் அதிகரித்தமை. |
| நேர் செலவினங்கள் | 23,284,522 | 51.60 | - மின்சாரக் கட்டண திருத்தம் காரணமாக ரூபா 18,796,621 தொகையினால் மின்சாரச் செலவு அதிகரித்தது.<br>- மின் பிறப்பாக்கி திருத்தம், சேவைக் கிரயத்தில் அதிகரிப்பு, எல்ஈடி தொகுதி விளக்குகளில் பதிலீடு மற்றும் ஏனையவை காரணமாக ரூபா 2,035,216 தொகையினால் உபகரணம், மின் நிறுவல் மற்றும் மின் பிறப்பாக்கி பராமரிப்பு கிரயம் அதிகரித்துள்ளது.<br>- ரூபா 926,799 தொகையினால் நகர கட்டணங்களில் அதிகரிப்பு |
| நிர்வாகம் மற்றும் ஏனைய செலவினங்கள் | 12,474,351 | 95.13 | - 2022 ஒக்தோபர் 01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வரையில் அமுல்படுத்தப்பட்ட சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி ரூபா 7,188,521 தொகையினால் அதிகரித்தமை.<br>- கடன்பட்டோர் ஐயக்கடனுக்கான ஏற்பாட்டில் அதிகரிப்பு ரூபா 3,063,173 ஆகும். - கம்பனி இவ்வருடம் ரூபா 563,173 தொகையை மேற்கொண்டதுடன் 2022 இல் ஏற்பாட்டினை ரூபா 2.5 மில்லியனால் திரும்பல் செய்திருந்தது. |
| பெறுமானத் தேய்வு மற்றும் பெறுமானக் குறைப்பு | 8,755,382 | 28.54 | -நிலையான சொத்துக்களின் இழிவுப்பெறுமதியினை புதிதாக மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரு ஆயுட்காலங்களுக்கிடையில் ஒதுக்கீடு செய்தமையினால் அதிகரித்தது. |
| ஆலோசனைக் கட்டணங்கள் | 367,790 | 25.16 | -2022 ஆம் ஆண்டில் காணப்படாத வாடகை நோக்கத்திற்காக பெறப்பட்ட மதிப்பீட்டிற்கான ரூபா 230,000 தொகையினை உள்ளடக்குகின்றது. |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 வருட காலப்பகுதிகளுக்கான கம்பனியின் குறித்த சில முக்கிய விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 |
|---|---|---|---|---|---|
| தேறிய இலாப விகிதம் (சதவீதம்) | 70 | 74 | 64 | 71 | 66 |
| நடைமுறை சொத்துக்கள் விகிதம் (தடவைகள்) | 18.18 | 10.93 | 18.29 | 23.95 | 34.54 |
| மொத்த சொத்துக்களுக்கான தேறிய நடைமுறைச்சொத்துக்கள் (தடவைகள்) | 0.50 | 0.45 | 0.40 | 0.61 | 0.58 |

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஒப்பந்தக் காலம் ஆரம்பிப்பதற்கு முன்பே ஒப்பந்த உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட வேண்டும். எனினும் 2023 ஆம் வருடத்தின் போது மேற்கொள்ளப்பட்ட நான்கு எண்ணிக்கையிலான ஒப்பந்த உடன்படிக்கைகள் குறிப்பிடப்பட்ட ஒப்பந்த காலம் ஆரம்பிக்கப்பட வேண்டியதிலிருந்து 03 மாதங்கள் கடந்த பின்னரே கையொப்பமிடப்பட்டிருந்தன என்பது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே வழங்கப்படுகின்றன. | உறுதி செய்தல், வாடகைக் கட்டண திருத்தம் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையினை செயற்படுத்திலில் ஒப்பந்தத்திற்கு பெற்ற தரப்பினரின் தாமதங்கள் போன்ற காரணங்களினால் காலாவதியாகும் திகதிக்கு மேல் செல்கின்றன. | ஒப்பந்தக் காலம் ஆரம்பிப்பதற்கு முன்பாக ஒப்பந்த உடன்படிக்கையினை கைச்சாத்திடுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது |

| | ஒப்பந்தத்திற்கு பெற்றவர்களின் பெயர்கள் | உடன்படிக்கை இல. |
|---|---|---|
| 01 | பர்தி எயார்டல் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | 436 |
| 02 | ஸ்ரீ லங்கா மேர்ச்சன்ட் பேங் & பைனான்ஸ் பிஎல்சி | 386 |
| 03 | இலங்கை வங்கி சுபர் க்ரேட்- கண்டி | 393 |
| 04 | கியுஎஸ் கோர்ப் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | 388 |

| | | | |
|---|---|---|---|
| (ii) | குத்தகைக்கு பெற்ற அனைவருடனான ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளிலிருந்து 14 நாட்களுக்கு முதல் மாதாந்த வாடகையினை அவர்களினால் செலுத்த முடியாவிட்டால் குத்தகைக்கு பெற்றவரிடமிருந்து மாத வாடகையிலிருந்து 20 சதவீதம் தண்டப்பணம் | சகல ஒப்பந்த உடன்படிக்கைகளிலும் தண்டப்பண உட்பிரிவு காணப்படுகின்ற போதிலும் ஒப்பந்தத்துக்கு பெற்றவர்களிடமிருந்து | ஒப்பந்த உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தாமதித்த ஒப்பந்த கொடுப்பனவுகளின் |

| | | |
|---|---|---|
| அறவிடப்படுகிறது. குத்தகைக்கு பெற்றவர்கள் 03 மாத காலத்திற்கும் மேலாக கொடுப்பனவினை தாமதப்படுத்தியிருந்த போதிலும் தாமதித்த கொடுப்பனவுகளிற்காக எவ்வித தண்டப்பணங்களும் அவர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. குத்தகைக்கு பெற்றவர்களின் விபரங்கள் கீழே வழங்கப்படுகிறது.<br><br>○ இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம்<br>○ எஸ்எல்ஐஐடி அகடமி (பிறைவேட்) லிமிட்டட் | ஆரம்பத்திலிருந்தே தண்டப்பணம் அறவிடப்படவில்லை. | மீது தண்டப்பணம் விதிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |